# தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

| | |
|---|---|
| விடுநர்<br>டாக்டர். மா. ஆர்த்தி இ.ஆ.ப.,<br>மாநில திட்டஇயக்குநர்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,<br>பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,<br>சென்னை 600006. | பெறுநர்<br>முதன்மை கல்விஅலுவலர்கள்<br>அனைத்து மாவட்டங்கள். |

**ந.க.எண்: 228/ஆ3/கலை/ ஒபக/ 2023, நாள்:28.11.2023**

| | |
|---|---|
| பொருள் | ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – அரசு நிதியுதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கான கலைதிருவிழா போட்டிகள் 2023–24– மாநில அளவிலான போட்டிகள் – வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து. |
| பார்வை | தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்க கல்வி இயக்குநர்களின் கூட்டு செயல்முறைகள் ந.க.எண்:3856/ ஆ3/கலை/ஒபக/2023, நாள்:02.11.2023. |

*************

அனைத்து அரசு நிதியுதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 30.11.2023, 01.12.2023 மற்றும் 02,12.2023 வரை கீழ்காணும் நாமக்கல் மாவட்டத்தில் மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் நடைபெறவுள்ளது. மேலும் இம்மையத்திற்கு கீழ்காணும் பணியாளர்களை பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

| வகுப்பு | போட்டிகள் நடைபெறும் மாவட்டம் | போட்டிகள் | பொறுப்பு அலுவலர்கள் |
|---|---|---|---|
| 6–8 | நாமக்கல் | அனைத்து வகைப் போட்டிகள் | 1. திரு.எஸ். சுந்தராமன், ஆலோசகர்<br>2. கார்த்திக் –PMU |
| 9 – 10 | | அனைத்து வகைப் போட்டிகள் | 3. திரு. எஸ். ஜனார்தனன் ஆலோசகர்<br>4. சாய்ராம்–PMU |
| 11 – 12 | | அனைத்து வகைப் போட்டிகள் | 5. ச. செல்வகுமாரி,<br>6. ஸ்ரீஜா –PMU |

ஆ, மேலும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை மேற்காண் மையங்களுக்கு அழைத்து சென்று போட்டிகளில் பங்கேற்க செய்தல் சார்ந்து வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்கப்படுகிறது.

38 மாவட்டங்களிலிருந்து மாவட்ட அளவில் மூன்று பிரிவுகளில் பல்வேறு போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களை மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்றிட பொறுப்பு ஆசிரியர் துணையுடன் (1:10) நாமக்கல் மாவட்டத்திற்கு அழைத்து வருதல் வேண்டும். இதற்கான போக்குவரத்து வசதியினை வெற்றி பெற்ற மாணவர்கள் சார்ந்த பள்ளிகள் சொந்த பொறுப்பில் ஏற்படுத்தி கொள்ளுதல் வேண்டும்.

மாநில அளவில் நடைபெறும் கலைத் திருவிழாவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டியின் வகை, போட்டி நடைபெறும் இடம், நாள், நேரம், தங்கும் வசதி, தொடர்பு அலுவலர்களின் பெயர், தொலைபேசி எண் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் நடைபெறும் நாமக்கல் மாவட்டத்தில் இருந்து பெற்று திட்டமிடல் வேண்டும்.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டங்களில் மாவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களை மாநில அளவிலான போட்டிகள் நடைபெறும் இடத்திற்கு ஒருங்கிணைத்து பொறுப்பு ஆசிரியர்களுடன் தகுந்த பாதுகாப்புடன் அனுப்பி வைத்திடல் வேண்டும்.

மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் பெற்றோரிடமிருந்து ஒப்புகை கடிதம் பெற்று பின்னர் கலந்து கொள்ள செய்தல் வேண்டும்,

மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற மாணவ / மாணவிகளை போட்டி துவங்கும் நாளுக்கு முந்தைய நாள் மாலை 6 மணிக்குள்ளாக மாணவ/ மாணவியருக்கு தங்கும் வசதி செய்யப்பட்டுள்ள மையத்திற்கு தேவையான உடைமைகளுடன் பொறுப்பாசிரியர் மேற்பார்வையில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

போட்டிகள் நடைபெறும் மையங்களுக்கு தனித்தனியே பொறுப்பாளர் ஒருவர் (ஆசிரியர் / அலுவலர்) போட்டிகள் நடைபெறும் மாவட்டத்தில் பொறுப்பு அலுவலர்களுடன் கலந்து பேசி செயல்படுமாறு தெரிவிக்கப்படுகிறது.

போட்டிகளில் பங்குபெறும் மாணவர்களின் பயணத்திட்டத்தை முன்கூட்டியே போட்டிகள் நடைபெறும் நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட/மைய பொறுப்பு அலுவலர்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

போட்டிகள் பங்கு பெறும் மாணவர்கள் மையத்தில் தங்குவதற்கு ஏதுவாக போர்வை –1, உணவு தட்டு – 1, டம்ளர் – 1 மற்றும் தேவைப்படும் மருந்து பொருட்கள் பயன்படுத்துவோர் உடன் அவசியம் கொண்டு வருதல் வேண்டும்.

விலை உயர்ந்த ஆபரணங்கள் மற்றும் பொருட்களை உடன் எடுத்து வருவதை தவிர்த்தல் வேண்டும்.

போட்டிகளுக்கு தேவையான ஒப்பனை பொருட்கள், தேவையான கலைக்கருவிகள், ஆடைகள் மற்றும் படைப்புகள் ஆகியவை எடுத்து வருவது போட்டியில் பங்குபெறுவோரின் பொறுப்பாகும்.

ஒவ்வொரு போட்டியாளரும் போட்டியில் கலந்துக் கொள்ளும் மையங்களுக்கு காலை 9 மணிக்குள் வருகை புரிந்து தனது பதிவினை முடித்தல் அவசியம்.

பதிவின் போது இரவு தங்கும் வசதி தேவைப்படின் அதனை உறுதி செய்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் விவரங்களை போட்டி நடைபெறும் மையத்திற்கு முன்னதாகவே தெரிவித்தல் வேண்டும்.

போட்டிகள் முடிந்தவுடன் போட்டி நடைபெற்ற மையத்தை விட்டு வெளியேறி மாணவர்கள் பொறுப்பாசிரியருடன் தங்கள் மாவட்டத்திற்கு பாதுகாப்பாக திரும்ப பயணம் மேற்கொள்ள வேண்டும். க்ண்டிப்பாகா பிற இடங்களுக்கு சுற்றுலா செல்லுதல் கூடாது.

பொறுப்பு ஆசிரியர்களை (ஆண்/பெண்) போட்டி நடைபெறும் மையங்களுக்கு போட்டிகளில் பங்குபெறும் மாணவ / மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அனுப்புதல் வேண்டும். குறிப்பாக மாணவிகளை பாதுகாப்பாக அழைத்து வர

உரிய எண்ணிக்கையின் அடிப்படையில் பெண் பொறுப்பு ஆசிரியர்கள் மட்டுமே உடன் வருதல் வேண்டும்.

பொறுப்பு ஆசிரியர்கள் மற்றும் போட்டிகள் பங்கேற்கும் மாணவர்கள் மட்டுமே போட்டி நடைபெறும் மையங்களுக்குள் அனுமதிக்கப்படுவார்கள். பெற்றோர் / மற்றவர்களுக்கு கண்டிப்பாக அனுமதி கிடையாது.

பயணத்தின் போதும், போட்டி நடைபெறும் மையங்களில் உள்ள போதும் வெளி நபர்களிடமிருந்து உணவு வாங்குவது மற்றும் உண்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

முதலில் வரும் மாவட்டத்திற்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பதிவுக்குழுவினர் மாணவர்களுக்கு டோக்கன்கள் வழங்க வேண்டும். டோக்கன் எண் எல்லா நேரங்களிலும் தெரியும் விதமாக அது இரு பக்கங்களிலும் அச்சிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு பங்கேற்பாளரின் தனித்தனி வீடியோக்கள் பதிவுக் குழுவால் கொடுக்கப்பட்ட வரிசை எண்ணுடன் எடுக்கப்பட வேண்டும், வீடியோ கவரேஜ் குழு, அந்த எண்ணை பயன்படுத்தி வீடியோக்களை பதிவு செய்துகொள்ள வேண்டும். இது நிகழ்ச்சியை ஆவணப்படுத்தவும் மற்றும் மேல்முறையீடுகளுக்கும் உதவும்.

நிகழ்வின் அனைத்து நாட்களிலும் முதலுதவிக்காக செவிலியர்களுடன் மருத்துவக் குழு இருக்க வேண்டும்.

மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு கழிவறைகளை தொடர்ந்து சுத்தம் செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

நடுவர்கள் தங்கள் தொலைபேசிகளை Silent mode–ல் வைத்திருக்க வேண்டும். மேலும், அவசர தேவையின்றி அழைப்புகளைச் செய்யவோ, புகைப்படங்கள் அல்லது காணொளிகள் எடுக்கவோ கூடாது.

வெளியாட்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர்கள் போட்டி நடைபெறும் பகுதியில் அனுமதிக்கப்பட மாட்டார்கள். போட்டிகளுக்கு இடையூறாக புகைப்படங்கள் அல்லது காணொளிகள் எடுப்பதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட வேண்டும்.

தொழில்நுட்ப சிக்கல்களைத் தவிர்க்க, போட்டிக்கு பயன்படுத்தப்படும் ஆடியோ/பாடல்கள் நிகழ்ச்சிக்கு முன்பாகவே மேடையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் டோக்கன் அமைப்புடன் சுகாதாரமான உணவு வழங்கப்பட வேண்டும்.

பங்கேற்பாளர்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு வசதியாக போட்டி நடக்கும் இடம் நன்கு வெளிச்சமாகவும் காற்றோட்ட வசதி இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

போட்டிகள் முழுமையாக நடந்து முடிந்த உடன் வெற்றியாளர்கள் பெயர்கள் அறிவிக்கப்பட வேண்டும்.

ஒருங்கிணைப்பின் போது குழப்பத்தைத் தவிர்க்க, அனைத்து நடுவர்களும் பங்கேற்பாளர்களின் டோக்கன் எண்ணை ஒரே வரிசையில் தங்கள் தீர்ப்புத் தாளில் குறிப்பிட வேண்டும்.

பொது நிகழ்விற்கு ஒவ்வாத பாடல்கள் போட்டிகளில் இடம்பெறுவதை அனுமதிக்க வேண்டாம். அவ்வாறான பாடலை குழு/தனிநபர் பயன்படுத்தினால் அந்த பங்கேற்பாளர்கள் உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் நடத்துதல் சார்ந்து பார்வையில் காணும் கடிதத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி போட்டிகள் நடத்திட நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

எனவே அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் எவ்வித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் மாநில அளவிலான போட்டிகளை நடத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மாநில திட்ட இயக்குநருக்காக**